ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

**ஊடக வெளியீடு**

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஊடக ஒழுங்குபடுத்தல் முன்மொழிவினை ஊடக அமைச்சரிடம் சமர்ப்பித்தது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் உறுப்பு அமைப்புக்களும் அதனுடன் இணைந்த அமைப்புக்களும் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல அவர்களை மார்ச் 15, 2021 அன்று ஊடக அமைச்சில் சந்தித்திருந்தன. இதன்போது இலங்கை ஊடகங்களுக்கான, ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் பொறிமுறையின் திட்ட முன்மொழிவில் கோடிட்டுக் காட்டப்படக் கூடிய முக்கிய விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. முன்மொழியப்பட்ட இலங்கை ஊடக அதிகாரசபை சுய ஒழுங்குபடுத்தல் கொள்கைகள் சமூகப் பொறுப்பு மற்றும் கருத்துச் சுதந்திரத்தினை அடிப்படையாகக் கொண்டவை. இதில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் டிஜிட்டல் ஊடகங்களையும் உள்ளடக்கியது.

இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம், இலங்கை பத்திரிகையாசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம், தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இந்த புதிய பொறிமுறையானது 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகை பேரவை சட்டத்தினை இரத்து செய்து, 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம், 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி சட்டம், 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டம் மற்றும் 1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகைகள் கட்டளைச் சட்டம் போன்றவற்றில் பொருத்தமான திருத்தங்களை கொண்டுவரும் என்று முன்மொழியப்பட்டது.

இன்றைய சிக்கலான ஊடகச் சூழல் ஒழுங்குபடுத்தப்பட்டு, தொடர்புடைய நிபுணத்துவத்துடன் நிர்வகிப்படுவதை உறுதி செய்வதற்காக தொழில்துறை ஊடக பிரதிநிதி, ஊடகங்களின் அரச பிரதிநிதித்துவம் மற்றும் நிதி, சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீன ஊடகங்களைச் சேர்ந்த நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட குழு முன்மொழியப்பட்ட அதிகாரசபையில் காணப்படும். ஒழுக்க நெறிக் கோவையினை பின்பற்றுவதை உறுதி செய்தல், சொந்த அவதானிப்பு மற்றும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்தல், ஒளிபரப்பு மற்றும் உள்ளடக்க உரிமங்களை வழங்கல், ஊடகங்களை பதிவு செய்தல், தொடர்புடைய கட்டணங்களை விதித்தல், உரிம காலத்தை விதித்தல், உள்ளடக்க

உரிமங்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல், விசாரணையின் அடிப்படையில் அபராதங்களை விதித்தல் போன்ற விடயங்களில் அதிகாரசபை ஈடுபடும்.

முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட விசாரணைகள் அல்லது அதிகாரசபையின் அவதானிப்புகள் சமரசம், மத்தியஸ்தம் மற்றும் நடுவர் செயல்முறை மூலம் கையாளப்படும். நடுவர் செயல்முறை 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுவர் சட்டத்தின்படி, குறிப்பாக பகுதி V இற்கு அமைவாக நடுவர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த செயல்முறைகளில் இருந்து எந்தவொரு உத்தரவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொருத்தமான ஒரு தீர்விற்கு வருவதற்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களையும் இணைத்துக் கொள்வேன் என அமைச்சர் தெரிவித்தார்.

**(படம் இணைக்கப்பட்டுள்ளது)**

**(படத்தின் தலைப்பு)**

(மத்தியில்) கௌரவ அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, (அமைச்சரின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள்) திரு. குமார் நடேசன் (தலைவர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை வெளியீட்டாளர் சங்க பிரதிநிதி), திரு. சிரி ரணசிங்க (தலைவர் இலங்கை பத்திரிகையாசிரியர் கழகம்), திரு. குமார் லோபேஸ் (பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்), திரு. காஞ்சன தசநாயக்க (இலங்கை பத்திரிகையாசிரியர் கழகம்), (அமைச்சரின் இடது பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள்) செல்வி. சீதா ரஞ்சனி (ஏற்பாட்டாளர், சுதந்திர ஊடக இயக்கம்), திரு. லக்ஷ்மன் குணசேகர (தலைவர், தென்னாசிய சுதந்திர ஊடக சங்கம்), திரு. என். எம். அமீன் (தலைவர் முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய பிரதிநிதி), தர்மசிறி லங்காபேலி (பொது செயலாளர், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம்)